# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2012 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ரீ.பீ. ஏக்கநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, யூன் மாதம் 08 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

## 2012 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ரீ. பீ. ஏக்கநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது]

ச.வ.ஓ. கூட் 26/2010

### ரீ. பீ. ஏக்கநாயக்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

முன்னுரை.

''ரீ. பீ. ஏக்கநாயக்க மன்றம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ரீ. பீ. ஏக்கநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

ரீ. பீ. ஏக்கநாயக்க மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ரீ. பீ. ஏக்கநாயக்க மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக வுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் ரீ. பீ. ஏக்கநாயக்க மன்றம்'' என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக் கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்துடன் அது

2-PL 005065 -990 (2010/07)

அப்பெயர்கொண்டு வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது:-

(அ) விஷேட ஆதார சேவைகளை மேற்கொள்ளுதலும் உதவியளித்தலும் பரிசுகள் வழங்குதலும் நூலக வசதிகளையும் வறிய மாணவர்களின் படிப்பிற்கு அவசியமான ஊக்குவிப்பையும் வழங்குதலும் ;

(ஆ) புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை, க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை போன்ற தேசிய மட்டத்திலான பரீட்சைகளுக்கு அமரும் பாடசாலைச் சிறுவர்களுக்கு விசேட ஆதார நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல் ;

(இ) பாடசாலைச் சிறுவர்களின் கலாசார தேர்ச்சிகளைக் கணிப்பீடு செய்வதற்கான துறைப் பிரிவுகளை வழங்குதலும் பாடசாலைச் சிறுவர்களின் கலாசாரத் தேர்ச்சிகளை ஊக்குவிப்பதற்கு திறமைகள் படைத்த விருதுகளும் சான்றிதழ்களும் வழங்குதலும் ;

(ஈ) அத்தகைய நடைமுறைகளுக்கு முக்கியத்துவமளிக்கும் இளம் சந்ததியினரை உருவாக்கும் நோக்கத்துடன் இளைஞர்களுக்கிடையே சமூக, சமய விழுமியங் களையும் ஒழுக்கநெறியையும் வேரூன்றச் செய்யும் விசேட பயிற்சிநெறிகளை நடைமுறைப்படுத்துதல் ;

(உ) தம்ம பாடசாலைகளினதும் முன்பள்ளிகளினதும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு செயலமர்வுகளை யும் உரையாடல்களையும் கருத்தரங்குகளையும் நடாத்துதலும் புதிய முன்பள்ளிகளை ஆரம்பிப் பதனை ஊக்குவித்தலும் ;

(ஊ) சிரேஷ்ட மாணவர்களை தலைமைத்துவத்திற்கு உருவாக்குவதற்கென அவர்களுக்கு தலைமைத்துவ முகாம்களையும் செயலமர்வுகளையும் நடைமுறைப் படுத்துதலும் வெற்றிகரமான வாழ்க்கைக்காக அவர் களுக்குக் கல்வியறிவூட்டுதலும் ;

(எ) உடல்நலம் மற்றும் ஆரோக்கிய நடைமுறை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விளையாட்டுத்துறை ஊடாக மாணவ சமுதாயத்தின் உடல் ஆரோக்கியத்தை ஊக்கு விப்பதற்கு செயல்முறை நிகழ்ச்சித்திட்டங்களை நடை முறைப்படுத்துதல் ;

(ஏ) இலங்கை மரபுரிமை, சூழல், வனசீவராசிகள், குடிசனம் மற்றும் நாட்டுப்பற்று பற்றிய விழிப் புணர்வை உருவாக்குவதற்காக கல்விச் சுற்றுலாக் களையும், சிரமதானப் பணிகளையும் செயலமர்வு களையும் ஒழுங்குபடுத்துதலும் நடாத்துதலும் ;

(ஐ) பாடசாலைகளில் சாரணர் குழுக்களையும் சிற்றணி களையும் உருவாக்குவதற்கு உதவி வழங்குதலும் ஊக்குவித்தலும் ;

(ஒ) சிரேஷ்ட பிரசைகளின் ஒழுங்கமைப்புகளால் ஆற்றப் பட்ட சேவைகளுக்கு உதவி வழங்குதலும் அத்தகைய பங்கேற்பைத் தொடர்ந்து நடாத்துவதற்கு அத்தகைய ஒழுங்கமைப்புகளுக்கு ஊக்கமளித்தலும் ;

(ஓ) தற்பொழுது நடைமுறையிலுள்ள முறைசாராத கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், சிறப்புக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், வளர்ந்தோர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைக் கொண்டுநடாத்துவதற்கு ஆதரவும் உதவியும் வழங்குதல் ;

(ஔ) பாரம்பரிய மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழிற் செயற் பாடுகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஊக்கு விப்பு அம்சங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தலும் அவர்களின் செயற் பாடுகளை மேம்படுத்துதலும் ;

(க) வேலையில்லாத இளைஞர்கள் சுயதொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதனை இயலச்செய் வதற்கு அவர்களுக்குத் தேவையான உதவியும் ஆதரவும் பயிற்சியும் அளிப்பதற்கு அவசியமான நடவடிக் கையை மேற்கொள்ளுதல் ;

(ங) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்கள்கொண்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஒழுங்கமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்று தல் ; அத்துடன்

(ச) வடமேல் மாகாணத்தின் சூழல்சார்ந்த மரபுரிமை யையும் தாவர மற்றும் விலங்கினத்தையும் திணைப் பறவைகளையும் பாதுகாப்பதற்கு விசேட கருத்திட்டங் களை ஊக்குவித்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தினதும் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமையவும் அவற்றிற்கிணங்கவும் தெரிவுசெய்யப்பட்ட தலைவரும் செயலாளரும் பொருளாளரும் உட்பட பதினொரு உறுப்பினர்களைக்கொண்ட பணிப்பாளர் சபையொன்றினால் (இதனகத்துப்பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் மன்றத்தின் தலைவர் கூட்டுத்தாபனத்தின் முதலாவது தலைவரா தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை இச்சட்டம் தொடங் கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவிவகித்த ஆளும் சபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சபையின் உறுப்பினர் ஒருவர் அத்தகைய உறுப்பினரின் இறப்பு அல்லது பதவிதுறத்தலின் காரணமாக அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி நான்கு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். உறுப்பினரொருவரின் இறப்பின் அல்லது பதவிதுறத்தலின் காரணமாக சபையில் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில் புதிய உறுப்பினர் ஒருவரை நியமிப்பதன்மூலம் அத்தகைய வெற்றிடம் நிரப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய புதிய உறுப்பினர் நான்கு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான வாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத் தத்துவங்களுள், வங்கிக்கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றிப் பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், எவையேனும் மானியங்களை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளவும் திரட்டவும், கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. *(1)* கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலதான உறுப்பாண்மைக் கட்டணங்கள், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை அகற்றுதல், அவர்களைப் பதவிவிலக்குதல் அவர்கள் பதவி விலகல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும் பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுவதிலும் கூட்டங்களில் அலுவல்களை நடாத்துதலிலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் கூட்ட நடப்பெண்ணும் அவர்களின் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் ஆகியோரின் நியமனமும் அவர்களது தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படவுள்ளனவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான தனிசுகள்.

**7**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முந்திய நாளன்றுள்ள மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சபைக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அன்பளிப்பு, விருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, கைமாற்றங்கள், கொடைகள், உதவுதொகை, கட்டணங்கள் மற்றும் மானியக்கொடைகள் என்றவகையில் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் சபையால் தீர்மானிக்கும் ஏதேனும் வங்கியில் அல்லது பல வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் அமுலாக்குவதிலும் இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதிலும் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**9.** (1) கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப் படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத் தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் தீர்க்கும் நோக்கத்திற்காக அத்தகைய உறுப்பினரின் உறுப்பாண்மைக் கட்டணமாக வருமதி யான தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்து வதற்குப் பொறுப்புடையவராதலாகாது. உறுப்பினர்களின் பொறுப்புக்களை வரையறுத்தல்.

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்பட்சத்தில், அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் செலுத்தித் தீர்க்கப்பட்டபின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அல்லது உடையனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதினின்று அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான வேறு ஏதேனும் ஒழுங்கமைப்பிற்கு அல்லது ஒழுங்கமைப்புகளுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது ஒழுங்கமைப்புகள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்போது அல்லது அதற்குமுன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**12.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சபை, கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம், அதன் சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபையால் நியமிக்கப்படும் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ;

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத் தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமாக இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று என்று பொருளாகும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை தலைவரினதும் சபையின் உறுப்பினர் ஒருவரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்